முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

# Provincial Department of Education - NWP

22 T I

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020

## First Term Test - Grade 11 - 2020

### தமிழ்மொழியும் இலக்கியமும் - I

பெயர் : ..................................... நேரம் : 01 மணித்தியாலம்

**கவனிக்க :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கம் உடைய வட்டத்திற்குள் ( X ) அடையாளமிடுக.

■ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(01) தச்சன் செய்த சிறு **மா** வையம். இங்கு **மா** எனப்படுவது.
(1) மரம் (2) பொடி (3) குதிரை (4) குரங்கு

(02) நாணாமை, நாடாமை, **நாரின்மை.** இங்கு **நாரின்மை** எனப்படுவது.
(1) வெட்கமின்மை (2) கோபமின்மை (3) ஒழுக்கமின்மை (4) அன்பின்மை

(03) பொய்கை ஊரன் **கேண்மை. கேண்மை** என்பதன் எதிர்ச் சொல்.
(1) நட்பு (2) பகைமை (3) இளமை (4) மேன்மை

(04) **தூல வடிவில்** நின்றும் மறைந்து இலட்சியப் புருடர்கள். **தூல வடிவு** என்பதன் எதிர்க்கருத்து.
(1) சூக்கும வடிவு (2) தூய வடிவு (3) புது வடிவு (4) அட்சய வடிவு

(05) தண்கயமாடும் **மகளிர். மகளிர்** என்பதன் எதிர்ப்பாற்சொல்.
(1) மங்கையர் (2) சிறுவர் (3) அறிஞர் (4) ஆடவர்

■ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

(06) பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சொற்களின் இணைவு.
(1) குண்டு - வடவை (2) கலை - பிணா (3) களிறு - பிடி (4) அலவன் - பெடை

(07) கொல்லேல சுடுதண்ணி வச்சீக்கிய. இங்கு கொல்லேல எனும் பேச்சு வழக்குச் சொல் உணர்த்தும் பொருள்.
(1) சமையலறையில் (2) குளியலறையில் (3) வீட்டுப் பின்புறத்தில் (4) அடுப்பங்கரையில்

(08) கொப்பு, கூட்டம், சுற்றம், மூங்கில் எனும் பொருள்களைத் தரும் சொல்.
(1) கிளை (2) சனம் (3) அமை (4) உறவு

(09) இன்று நகர்ப்புறங்களைப் போன்று கிராமப் புறங்களிலும் ஜெனரேட்டர் (Generator) பாவனை அதிகரித்துள்ளது. ஜெனரேட்டர் என்பதற்கு நிகராக தமிழில் வழங்கும் கலைச் சொல்.
(1) மின் அழுத்தி (2) மின்பிறப்பாக்கி (3) தன்னியக்கி (4) செய்ம்மதி

(10) வேறுபட்ட கருத்தைத் தரும் உவமைத் தொடர்

(1) இலவு காத்த கிளி போல
(2) விரி வெயிலில் விளக்கொளி போல
(3) ஆற்றில் கரைத்த புளி போல
(4) விழலுக்கு இறைத்த நீர் போல

(11) புராண கதைகளை சுவைபடக் கூறுபவன்.

(1) விகடகவி (2) தபுதாரன் (3) நைட்டிகன் (4) பௌராணிகன்

(12) இளமைப் பெயர்களில் 'பிள்ளை' என்ற சொல்லால் குறிக்கும் வழக்கம் அற்ற சொல்.

(1) கிளி (2) கீரி (3) எலி (4) அணில்

(13) பசி உண்டாதலைக் குறிக்கும் மரபுத் தொடர்.

(1) வயிற்றிலடித்தல் (2) வயிற்றெரிச்சல் (3) வயிற்றைக் கடித்தல் (4) வயிறு வீங்குதல்

(14) அறிஞர்கள் பலர் கூடிய சபை நடுவே புதிதாய் ஆக்கப்பட்டதொன்றை மேடையேற்றும் நிகழ்வு.

(1) அரங்கேற்றம் (2) வெள்ளோட்டம் (3) பரீட்சார்த்தம் (4) ஒத்திகை

(15) ஒரே பொருளைத் தரக்கூடிய பழமொழிச் சோடி.

(1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
எறும்பூரக் கற்குழியும்
(2) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
அலை மோதும் போதே தலை முழுகு
(3) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா
(4) தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்
தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

(16) 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' எனும் பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது.

(1) போலிச்சாட்டு
(2) துரோகத்தனம்
(3) வீண்விரயம்
(4) போலி நாகரிகம்

(17) தென்னிந்திய சினிமாவிலே நாடகத்துறை சார்ந்தவர்களே அதிகம் காலூன்றினர். காலூன்றல் எனும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்.

(1) பங்குபற்றுதல்
(2) சேர்தல்
(3) நிலைகொள்ளல்
(4) விட்டுவிடல்

(18) பின்வருவனவற்றுள் இணைமொழி

(1) தனியே தனியே
(2) ஆடிப்பாடி
(3) மள மள
(4) பட்டப் பகல்

(19) அ) நாட்டின் பிரதமராக கருணாகரன் தெரிவு செய்யப்பட்டார்.
ஆ) தேர்தலில் அதிகளவு விருப்பு வாக்குகள் கருணாகரனுக்கே கிடைத்தன.
மேற்படி வாக்கியங்களை இதே ஒழுங்கில் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆகவே
(2) ஆயினும்
(3) ஏனெனில்
(4) ஆதலால்

(20) பின்வருவனவற்றுள் எதிர்கால வினைமுற்றாகவும் பெயரெச்சமாகவும் அமைந்த சொல்.

(1) ஓடும்
(2) தருவேன்
(3) பாடின
(4) ஆடுவாய்

■ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

(21) பகரம் ‘b’ என்ற ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்.
(1) பசு (2) ஆபத்து (3) சம்பவம் (4) நட்பு

(22) மென்றொடர்க் குற்றியலுகரத்திற்கு உதாரணம் காட்டக்கூடிய சொல்.
(1) மனது (2) மூக்கு (3) நாடு (4) சங்கு

(23) மொழியிறுதிப் போலியாக அமைந்த சொல்.
(1) அவ்வை (2) சாம்பர் (3) நாயிறு (4) அரைசு

(24) புறவினாவாக அமைந்த சொல்.
(1) அவனோ (2) யார் (3) எது (4) அது

(25) வண்ணப் பறவை வானில் பறந்தது. இத்தொடரில் உள்ள வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குட்பட்ட சொல்.
(1) வண்ணம் (2) பறவை (3) வானில் (4) பறந்தது

(26) தோன்றல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்ற சொற்றொடர்.
(1) மயிலிறகு (2) நாட்காட்டி (3) பலாவிலை (4) பொற்றேர்

(27) ஏழாம் வேற்றுமைக்குரிய வேற்றுமைத் தொகையாக அமைந்த சொல்
(1) மாதவி மகள் (2) நீர்ப் பறவை (3) மலையருவி (4) தங்கக் காப்பு

(28) தமிழ் மொழித் தினத்திலே பேச்சு, வாசிப்பு, நடனம் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டன. பேச்சு, வாசிப்பு, நடனம் எனும் சொற்கள்.
(1) பொருட் பெயர்ச் சொற்கள் (2) தொழிற் பெயர்ச் சொற்கள்
(3) குணப் பெயர்ச் சொற்கள் (4) காலப் பெயர்ச் சொற்கள்

■ பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

(29) (1) ஆக்கப் பெயர் : தபாற்காரன், முயற்சி, நோயாளி
(2) கூட்டுப் பெயர் : கட்டுரை, வானொலிச் சேவை, நீரேரி
(3) வினையாலணையும் பெயர் : விழுந்தவன், கற்றோர், எழுதியது
(4) தொழிற்பெயர் : ஓட்டம், ஓடினான், ஓடுதல்

(30) (1) பெயரெச்சத் தொடர் : வீசும் காற்று, தேடிய செல்வம், ஓடுகின்ற நாய்
(2) வினையெச்சத் தொடர் : பாடி முடித்தான், உண்டு மகிழ்வாய், எழுதிக் கொடுத்தான்
(3) வினைமுற்றுத் தொடர் : அவன் பாடினான், கிளி பறந்தது, நாங்கள் ஓடினோம்
(4) உரித் தொடர் : கடி கமலம், தவப் புதல்வன், உறுபுலி

■ புள்ளிக்கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

(31) கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற பலர் தமது ...................................... இழந்தனர்.
(1) முதலீட்டுப் பணத்தை (2) காப்பீட்டுப் பணத்தை
(3) கட்டுப் பணத்தை (4) உதவிப் பணத்தை

(32) நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சாட்சியாளர்களுக்கு நீதிமன்றம் ..................................... அனுப்பியது.
(1) அழைப்பாணை (2) பிடியாணை
(3) கடிதம் (4) குறுஞ் செய்தி

(33) தமிழ்மொழித் தினப் போட்டிகளுக்கான சுற்றறிக்கையில் உள்ள விடயங்களை தெளிவுபடுத்தி ............................... வழங்கப்பட்டது.
(1) பின்னிணைப்பு (2) விஞ்ஞாபனம் (3) விளக்கவுரை (4) வெள்ளையறிக்கை


kalvi.lk

(34) எமது பாடசாலையின் எழுபத்தைந்தாவது நிறைவை முன்னிட்டு ............................... கொண்டாடப்படவுள்ளது.

(1) வெள்ளி விழா (2) மணி விழா (3) பவள விழா (4) அமுத விழா

(35) சில நிமிடங்களுக்கு முன்னதாகவே வந்திருந்தால் நீங்கள் அமைச்சரை .............................

(1) சந்திக்கலாம் (2) சந்திக்க முடியாது
(3) சந்தித்திருக்கலாம் (4) சந்திக்க வேண்டும்

(36) சுகவீன விடுமுறைப் போராட்டம் நடாத்தியும் கூட தொழிலாளர்களது கோரிக்கைகள் ............................

(1) நிறைவேற்றப்பட்டன (2) நிறைவேற்றப்படவில்லை
(3) நிறைவேறும் (4) நிறைவேற்றப்பட வேண்டும்

■ கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

சடுகுடுவென்றே நெய்வீர் கந்தையில்லை
  தார் வேந்தன் கட்டுவது சரிகை வேட்டி
கடல் நடுவில் முத்தெடுப்பீர் கஞ்சியில்லை
  கடனறியா வேந்துக்கு முத்துத் தொங்கல்
மடுப்புனலும் செங்குருதிப் புனலும் வார்த்து
  வள வயலில் களையெடுத்துக் காத்த நெல்லை
அடுக்களையில் கண்டீரோ! அரசன் வீட்டில்
  ஆ நெய்யில் சீரகச் சம்பா மிதக்கும்.

(37) இப்பாடலில் கூறப்படும் பிரதான கருத்து.

(1) தொழிலாளர்களின் முயற்சியும் அவர்கள் அடையும் பயன்களும்
(2) தொழிலாளர்களின் உழைப்பின் முக்கியத்துவம்
(3) தொழிலாளர்களின் முயற்சிக்கு அரசன் வழங்கும் பங்களிப்புகள்
(4) தொழிலாளர்கள் உழைப்பின் பயனை அவர்கள் அடைவதில்லை

(38) இங்கு அரசனின் செயற்பாடாக கூறப்படும் விடயம் .

(1) சரிகை வேட்டி நெய்தல் (2) முத்து ஆபரணங்கள் அணிதல்
(3) வயலில் களையெடுத்தல் (4) நாட்டைக் காத்தல்

(39) மடுப்புனலும் செங்குருதிப் புனலும் வார்த்து உழைப்பவர்.

(1) அரசன் (2) ஆடை நெய்பவர்
(3) முத்தெடுப்பவர் (4) உழவர்

(40) ஒழுங்கின்றித் தரப்பட்டிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் விதமான வைப்பினை தெரிவு செய்க.

(அ) இதனால் நாம் உண்ணும் உணவில் நச்சுத்தன்மை மிகுந்துள்ளது.
(ஆ) எனவே இவற்றிலிருந்து அனைவரையும் பாதுகாக்க வேண்டும்.
(இ) இலாபமீட்டுதலை கருதி இன்று விவசாயத்துறையில் அதிக இரசாயன உரங்களின் பாவனை அதிகரித்துள்ளது.
(ஈ) இவ்வுணவுப் பாவனையால் புற்றுநோய் முதலான கொடிய நோய்கள் மனித சமுதாயத்தில் பெருகி வருகின்றன.
(உ) அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் ஆரோக்கியமுள்ள ஒரு சமூகத்தை எமக்கு காண முடியாமல் போகும்.

(1) இ, ஈ, அ, உ, ஆ (2) இ, உ, அ, ஈ, ஆ
(3) இ, அ, ஈ, ஆ, உ (4) இ, அ, உ, ஆ, ஈ

( 1 x 40 = 40 புள்ளிகள்)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

22 T II

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020
# First Term Test - Grade 11 - 2020

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II

பெயர் : ……………………………… நேரம் : 02 மணித்தியாலம்

**கவனிக்க**
எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(01) **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.**

(1) மலர்விழி ஓர் 'கிளார்க்கை' கரம்பிடிதத்தாள்.
'கிளார்க்' எனும் சொல்லுக்கு தமிழில் வழங்கும் சொல் யாது?

(2) "ஐயா சாப்பிட்டு முடிஞ்சு ஆறுதலா இருக்கேக்க கேட்க வேணும்"
மேற்படி பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.

(3) நக்கீரர் என்னுடைய பாடலில் குற்றம் உள்ளதென்று கூறியது யார் எனக் கேட்டார்.
பொருத்தமான நிறுத்தக் குறியீடுகள் இட்டு இவ்வாக்கியத்தை திருப்பி எழுதுக.

(4) பின்வரும் தொடரை சந்தி பிரித்தெழுதுக.
தெள்ளியவாலின் சிறுபழத்தொரு விதை.

(5) விசாரணை முடிவடைந்தது.
குற்றம் நிரூபிக்கப்படவில்லை.
சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார்.
பொருத்தமான இணைப்பிடைச் சொற்களை இட்டு தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக எழுதுக.

(6) திறமையான மாணவர்களுக்கே எப்போதும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.
இத்தொடரின் அ) எழுவாய் ஆ) பயனிலை என்பவற்றை எழுதுக.

(7) ஆரவாரம் மிக்க கடலை ஆடையாக உடுத்திருக்கும் இலங்கைத் தீவு.
இத்தொடரில் கையாளப்பட்டுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக.

(8) கொத்தன் கட்டடங்களைக் கட்டினான்.
இவ்வாக்கியத்தினை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(9) அந்த வளையல் தங்கத்தால் செய்யப்பட்டது.
இங்கு இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?

(10) 'காலாவதி' எனும் சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

( 2 x 10 = 20 புள்ளிகள்)

(02) பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

(1) "வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணப்படுத்தும்" என்றொரு கூற்று வழக்கில் உள்ளது. ஆரம்ப காலத்தில் வாசிப்பு மூலம் அறிவைப் பெற்றுக் கொண்டனர் பலர். ஆனால் இன்று வாசிப்பு என்பது மிகக் குறைவாகவே இடம்பெறுகின்றது. இதனால் மாணவர்கள் மத்தியிலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்த **ஒரு விளக்கக் கட்டுரை.**


kalvi.lk

(2) இறைவன் இயற்கையை வளமானதாகப் படைத்துள்ளான். மனிதன் தனது எல்லாவிதத் தேவைகளையும் இயற்கையிலிருந்தே பூர்த்தி செய்து கொள்கின்றான். எனினும் அவன் இயற்கையை பாதுகாக்கும் கடமையை மறந்து விட்டான். இதனாலேயே இயற்கையின் சீற்றம் மனிதனை அச்சுறுத்துகின்றது. இயற்கையின் சீற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெற மனிதன் முயல வேண்டும். இயற்கையின் பாதுகாப்பு தொடர்பான ஒரு **மேடைப் பேச்சு.**

(3) வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தொழில் நுட்பம் காரணமாக உலகமே சுருங்கி விட்டது. தொழில் நுட்பத்தின் ஒரு அங்கமான சமூக வலைத்தளங்கள் இன்று இளைஞர் சமூகத்தை ஆக்கிரமித்துள்ளன. சமூக வலைத்தளங்கள் இளைஞர் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாக இரு நண்பர்களுக்கிடையிலான **ஓர் உரையாடல்.**

(4) கல்வியிலும் பழக்கவழக்கங்களிலும் சிறப்பாக இருந்தவன் கார்த்திக். ஆனால் இடைநடுவில் ஏற்பட்ட தீய நண்பர்களின் சேர்க்கை அவனை தலைகீழாக மாற்றியது. இன்று கார்த்திக் எனும்போது எல்லோரும் அவனை இழிவாகவே நோக்குகின்றனர். கார்த்திக்கின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தினை கருவாகக் கொண்டு **ஒரு சிறுகதை.**

(25 புள்ளிகள்)

(03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

அறிவென்பது பொருள் சார்ந்த கோட்பாடு அல்லது நடைமுறை புரிதலைக் குறிக்கும். அதாவது செயலாக்கத் திறனறிவு பற்றிய ஆய்வை ஒளிர்வுக் கோட்பாடு என்று அழைப்பர். அறிவை நியாயப்படுத்தப்பட்ட உண்மையான நம்பிக்கை என்றும் வரையறுப்பர். அறிவு கல்வியினால், கேள்வியினால் வருவதாக இருக்கலாம். கல்வி, கேள்வி என்பவற்றால் கிடைக்கும் அறிவே உண்மையான அறிவு என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அறிவைப் பெற்றுக் கொள்ள ஒருவன் ஓயாது முயல வேண்டும். அறிவைப் புலக்காட்சியின் மூலமாகவும் கருத்துக்களைப் பரிமாறுவதன் மூலமாகவும் பகுத்தறிவதன் மூலமாகவும் ஆசிரியரிடம் சென்று கல்வி கற்பதன் ஊடாகவும் சுயமாக கற்றும் பெற்றுக் கொள்ளலாம்.

அறிஞர்களின் உரைகளைக் கேட்பதனூடாகவும் அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய அறிவு கேள்வியறிவு எனப்படும். ஔவையார், வள்ளுவர், கம்பர் முதலிய அறிஞர்கள் தமது நூல்களில் அறிவு குறித்தான விடயங்களைக் கூறியிருக்கின்றனர். அந்நூல்களைக் கற்பதனூடாக அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். அறிவைத் தருகின்ற நூல்கள் தமிழில் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆசிரியரின் துணையோடு இவற்றைக் கற்றல் வேண்டும். நூல்களை ஒரு முறை கற்பதனால் மட்டுமே அறிவை அடைந்து விட முடியாது. அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்தவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்று கூறியிருப்பது எல்லோருக்கும் தெரியும். இத்தகைய கூற்றுக்கள் ஒருவன் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு அவற்றைப் பயன்படுத்தவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

( 10 புள்ளிகள்)


kalvi.lk

(04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழே கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதவும்.

வட இந்தியாவின் பாகத, பாளி மொழிச் சொற்கள் சமண, பௌத்த சமயங்களின் தொடர்பினால் தமிழுக்கு கிடைத்தன. மேலும் சோழப் பெரு மன்னரின் ஆட்சி பல நாட்டுத் தொடர்பினை ஏற்படுத்தியதால் கன்னடம், தெலுங்கு முதலிய மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. பிற்காலத்தில் இஸ்லாமியரின் ஆட்சி காரணமாக அறபு மொழிச் சொற்களும் தமிழுடன் வந்து சேர்ந்தன. ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பு காரணமாக ஜன்னல், சாவி முதலான போர்த்துக்கேய மொழிச் சொற்களும் உலாந்தா, துட்டு முதலான டச்சு மொழிச் சொற்களும் இன்னும் பல ஆங்கில மொழிச் சொற்களும் தமிழுடன் கலந்தன. பிற மொழிச் சொற்கள் பேச்சு வழக்கிலேயே அதிகம் இடம் பெறுகின்றன. எழுத்து வழக்கில் ஓரளவு கையாளப்படுகின்ற போதிலும் செய்யுள்களில் மிக அரிதாகவே இடம் பெறுகின்றன. எனினும் ஓசை நயம், இளைஞர்களின் விருப்பு, தொடர்பாடல் என்பவற்றை கருத்திற் கொண்டு இன்றைய புதுக் கவிதைகளில் பிற மொழிச் சொற்கள் அதிகளவில் கையாளப்படுகின்றன.

(1) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வட இந்திய சமயங்கள் எவை?
(2) தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதற்கு காரணமான விடயங்கள் யாவை?
(3) இப்பந்தியில் கூறப்பட்டுள்ள ஐரோப்பிய மொழிகள் யாவை?
(4) புதுக் கவிதைகளில் வேற்றுமொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவை?
(5) பிறமொழிச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

( 10 புள்ளிகள்)

(05) உமது பிரதேசத்தில் தொடர்ந்து சில நாட்களாக பெய்த அடைமழை காரணமாக எல்லா இடங்களிலும் நீர் நிறைந்து காணப்படுகின்றது. அதனால் நோய்கள் பரவும் அபாயம் நிலவுகின்றது. இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் பொது மக்களை விழிப்பூட்டி வெளியிடும் **துண்டுப் பிரசுரம்** ஒன்றை 100 சொற்களில் எழுதுக.

**அல்லது**

நந்தவனம் கிராமத்தின் ஊடாகச் செல்லும் பிரதான பாதை நீண்ட நாட்களாக செப்பனிடப்படாமல் குழிகள் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மு.தமிழரசன் என உங்களைக் கருத்திற் கொண்டு பொன்னகரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு, இவற்றை நிவர்த்தி செய்து தருமாறு 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

( 15 புள்ளிகள்)

NWP EXAM Education கல்வி


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

# Provincial Department of Education - NWP

22 | T | III

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2020

## First Term Test - Grade 11 - 2020

### தமிழ்மொழியும் இலக்கியமும் - III

பெயர் : ................................... நேரம் : 02 மணித்தியாலம்

**கவனிக்க**

01, 02, 03, 04 ஆகிய வினாக்களுக்கும் 05, 06, 07 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக. எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) **சுருக்கமாக விடை தருக.**

(1) “வெங்கட்பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப்பிறைக்கும் விழிவேலே”

அ) இங்கு கரும்பிறை எனக் கூறப்படுபவர் யார்?

ஆ) அப்பிறைக்கும் எனும் தொடரின் பொருள் யாது?

(2) கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்.
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்.

அ) இங்கு கிம்புரி எனப்படுவது யாது?

ஆ) இந்நிகழ்வுகள் இடம்பெறும் மலை எது?

(3) ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக்கடை

அ) இங்கு ஏதிலார் எனப்படுபவர்கள் யாவர்?

ஆ) இக்குறட்பாவை கொண்டு கூட்டி எழுதுக.

(4) கணக்காயர் இல்லாதவூரும் .......
இது திரிகடுகம் எனும் நூலில் உள்ள பாடலாகும்.

அ) இங்கு கணக்காயர் எனப்படுபவர் யார்?

ஆ) திரிகடுகம் எக்காலத்தில் தோற்றம் பெற்றது?

(5) இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான். அட்ச இருதயக் கலையில் கை தேர்ந்ததாக இருந்தது.

அ) அட்சய இருதயக்கலை என்றால் என்ன?

ஆ) அக்கலையை தெரிந்து வைத்தவன் என இக்கதையில் கூறப்படுபவன் யார்?

(6) நரகம் புகினும் எள்ளேன்
திருவருளாயிருக்கப் பெறினிறைவா

அ) இக்கூற்றினைக் கூறியவர் யார்?

ஆ) அவர் யாரை நினைத்து இவ்வாறு பாடினார்?

(7) பொழிந்த நெய்யாகுதி வாய் வழி பொங்கி
எழுந்த கொழுங்கனலென்ன எழுந்தார்.

அ) இவ்வடிகளில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

ஆ) இங்கு கூறப்படும் இதிகாசப் பாத்திரம் யாது?

(8) “கடுமையார் கானகத்துக் கருணையார் கலி ஏக ....”

அ) கருணையார்கலி எனக் கூறப்படுபவர் யார்?

ஆ) இத்தொடரின் பொருளை எழுதுக.



kalvi.lk

(9) சினந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
கண்ணூறு படாமல் காரும் ஐயனாரே

அ) சினந்தரிவி வெட்டும் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) இப்பாடல் வரிகளில் இடம்பெறும் கிராமிய நம்பிக்கை எது?

(10) “இனி நினைந்திரக்கமாகின்று...” என்பது புறநானூறு பாடல்களில் ஒன்றாகும்.

அ) இப்பாடலைப் பாடிய புலவர் யார்?

ஆ) அவர் எதனை நினைத்து இப்பாடலைப் பாடினார்?

(2 x 10 = 20 புள்ளிகள்)

(02) **பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(1) கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே
எட்டுணையானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது

அ) பாடலில் கூறப்பட்டுள்ள இனிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) எட்டுணை, எத்துணை என்பவற்றின் பொருளை எழுதுக.

(2) தச்சன் செய்த சிறு மா வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல்
உற்று இன்புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புறனெம் செறிந்தன வளையே

அ) ஊர்த் தலைவனது எத்தகைய சிறப்புகள் இங்கு கூறப்பட்டுள்ளன?

ஆ) பாடலில் உள்ள உவமையினை விளக்குக.

(3) சூழு மாய வுலகினிற் கானுறுந்
தோற்றம் யாவையும் மானதமாகுமால்
ஆழு நெஞ்சகத்தாசையின் றுள்ளதேல்
அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பல பொருள் நாடுவோர்
வீழுமோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

அ) தாம் விரும்பும் யாவற்றையும் பெற வேண்டுமெனில் எவ்வாறு இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது?

ஆ) தாம் விரும்புவனவற்றை பெறாதவர்கள் எத்தகையவர்கள் என இங்கு கூறப்பட்டுள்ளது?


kalvi.lk

(4) இராமாயணத்தில் ஒரு காட்சி. தசரதன் இரண்டு இலட்சியங்களுக்கிடையில் ஊசலாடுகின்றான். ஒன்று அரசியல். மற்றையது சத்தியம். அரசியற் கொள்கையின்படி மூத்த புதல்வனுக்கு முடி சூட்டுவதா? அல்லது கைகேயிக்கு கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்த தர்ம சங்கடத்தின் மத்தியில் ஊசலாடுகின்ற அரசன் நினைக்கிறான். அரசியல் நிலை மாறக்கூடியது. சத்தியம் நிலை மாறாதது. நிலை மாறுந் தன்மையுள்ள அரசியற் கொள்கையை கை விடுவேன். நிலை மாறாத இயல்புள்ள சத்திய வாக்கைக் கடைபிடிப்பேன். இதுதான் அரசனது முடிவு.

அ) தசரதன் காத்த இலட்சியம் யாது?

ஆ) அரசியல், சத்தியம் என்பன பற்றி தசரதன் கொண்டிருந்த அபிப்பிராயம் எது?

(5) மறுபடியும் நான் அந்தக் கடைக்கு கம்பியூட்டரை கொத்துக் கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடை குடையென்று குடைந்தார். அவர்களுடைய சம்பாஷணை முற்றிலும் ஒரு புதிய பாஷையில் நடைபெற்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அ) 'நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர்' என்பதிலிருந்து யாது கூறப்படுகின்றது?

ஆ) 'கதாசிரியருக்கு கம்பியூட்டர் பற்றிய அறிவு மிகக் குறைவானது' என்பதை இப்பந்தியிலிருந்து குறிப்பிட்டுக் காட்டுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

(03) திருக்குறள் - பேதைமை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் விடயங்களைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதவும்.

அ) பேதைமை என்பதன் வரைவிலக்கணம்.

ஆ) பேதைமையுடையோரது பண்புகள்.

(6 + 9 = 15 புள்ளிகள்)

**அல்லது**

கம்பராமாயணம் - குகப்படலம் பகுதியில்

அ) கோசலை, குகன் ஆகிய இருவரும் அறிமுகமாகிய விதமும் அதனால் அவ்விருவரும் அடைந்த மகிழ்ச்சியும்.

ஆ) தசரதன் கூறப்பட்டுள்ள விதம்

என்பவற்றை விளக்குக.

(9 + 6 = 15 புள்ளிகள்)

(04) தனிப்பாடல்களைக் கொண்டு பின்வரும் தலைப்புகளில் விளக்குக.

அ) புகழேந்திப் புலவர் பாடும் சோழ மன்னனது பெருமைகள்.

ஆ) சீதக்காதி வள்ளலின் கொடைச் சிறப்பு.

(8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

'இலட்சியமும் சமநோக்கும்' எனும் கட்டுரையில்

அ) அருச்சுணன் இலட்சியத்தை பேணுவதன் அவசியத்தை கூறிய விதம்

ආ) தருமர் காத்த இலட்சியம்

என்பவற்றை விளக்குக.


kalvi.lk

(8 + 7 = 15 புள்ளிகள்)

■ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

(05) 'நாவலர் எழுந்தார்' கட்டுரையில் இலங்கை சட்ட நிரூபண சபைக்கு தமிழர் பிரதிநிதியை தெரிவு செய்வதில் நாவலர் காட்டிய அக்கறை கூறப்படுமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(06) 'இனி நினைந்திரக்கமாகின்று ......' என்று தொடங்கும் புற நானூற்றுப் பாடலில்

அ) இளமைக் காலத்து செயற்பாடுகள்
ஆ) முதுமைக் காலத்து நிலைமைகள்
சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

(5 x 2 = 10 புள்ளிகள்)

(07) தமிழ் நாட்டு சினிமாவின் வளர்ச்சியில் நாடகம் செலுத்திய தாக்கங்கள் யாவை என விளக்குக.

(10 புள்ளிகள்)

NWPEXAM

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page